பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 73** **நாள்: 30.05.2018**

## 11ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் சென்னைப் பள்ளிகளில் 87.61 சதவீத தேர்ச்சி மற்றும் 2 பள்ளிகள் 100 சதவீதம் தேர்ச்சியும் பெற்றுள்ளன என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கீழ் 32 சென்னை மேல்நிலைப்பள்ளிகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அதில் 2018–ஆம் ஆண்டு நடைபெற்ற அரசு 11–ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 1979 மாணவர்கள், 3179 மாணவியர்கள் என மொத்தம் 5158 மாணவ, மாணவியர்கள் தேர்வு எழுதினார்கள். இதில் 1588 மாணவர்கள், 2932 மாணவியர்கள் என மொத்தம் 4520 மாணவ, மாணவியர்கள் தேர்ச்சிப் பெற்றுள்ளனர். தேர்ச்சி சதவீதம் 87.61 ஆகும்.

**100/100 மதிப்பெண் பெற்ற மாணவ/மாணவிகள் – 14**
**வணிகவியல் – 13**
**கணக்குபதிவியல் – 01**

**ஐநூற்றுக்கு மேல் மதிப்பெண் பெற்றவர்கள் – 48**

**ஐநூற்று ஐம்பதுக்கு அதிகமான மதிப்பெண் பெற்றவர்கள் – 04**

**100 சதவீதம் தேர்ச்சி விழுக்காடு பெற்ற பள்ளிகள் – 2**

1. **சென்னை மேல்நிலைப்பள்ளி, கோயம்பேடு**
2. **சென்னை மேல்நிலைப்பள்ளி, லாயட்ஸ் ரோடு**

11–ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கும், 100 சதவீத தேர்ச்சி பெற்ற பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் மற்றும் துணை ஆணையாளர் (கல்வி) திருமதி மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., அவர்கள் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி